Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், ஜனவரி 02, 2025 | இதழ் 264

சென்னை செம்மொழி பூங்காவில் 4வது மலர் கண்காட்சி: ஸ்டாலின் துவக்கி வைத்தார்
பார்வையாளர்களைக் கவரும் யானை, பட்டாம்பூச்சி, ரெயில் பெட்டி, கப்பல் வடிவிலான மலர் அலங்காரம்

சென்னை, 02 ஜனவரி 2025: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சென்னையின் நான்காவது மலர் காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர், பூங்காவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியை பார்வையிட்டார். தொடர்ந்து, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முதலமைச்சருடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இம்மலர்காட்சி இன்று (2 ம் தேதி) தொடங்கி 18 ந் தேதி வரை நடைபெற உள்ளது. செம்மொழி பூங்காவில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நுழைவுசீட்டு வழங்கப்படும். மேலும் ஸீமீமீஜீஷ://மீஸ்லீஷ்ஷீக்ஷீமீவீநீஷ்ஸ்றீமீஷ்ஸ்ஷீமீ.வீஸ்/ஷஜீமீமீவீநீஸ்ளீமீமீஷ/ என்ற இணையதளம் வாயிலாகவும் நுழைவுச்சீட்டு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைவாசத்தலங்களில் உள்ள பூங்காக்களில் கோடை விழா நிகழ்ச்சிகள் மற்றும் மலர் காட்சிகள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்வுகள் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. இதைப்போன்று, சென்னை மக்களை கவரும் வகையில் 2022 ம் ஆண்டு முதல் சென்னையில் மலர் காட்சி நடத்தப்பட்டுவருகிறது, தோட்டக்கலை பயிர்களின் வளத்தையும், வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் நோக்கில் கடந்த மூன்று மலர் காட்சிகள் நடத்தப்பட்டன. இக்காட்சிகளை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு ரசித்தனர்.

சென்னையில் முதல் மலர்காட்சி கலைவாணர் அரங்கில் 3.6.2022 முதல் 5.6.2022 வரை 3 நாட்கள் நடைபெற்றது. இதனை 44,888 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர்.

செம்மொழி பூங்காவில் 3.6.2023 முதல் 5.6.2023 வரை நடைபெற்ற இரண்டாவது சென்னை மலர் காட்சியினை 23,302 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். இக்காட்சிகளில் பல்வேறு வண்ண அயல்நாட்டு மற்றும் பூர்வீக கொய்மலர்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

மூன்றாவது மலர்க்காட்சி செம்மொழி பூங்காவில் 10.2.2024 முதல் 20.2.2024 வரை 11 நாட்கள் நடைபெற்றது. கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற இம்மலர் காட்சியில் முழுவதும் பலவண்ண பூச்செடிகள் மற்றும் அழகுத்தாவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இதனை 1,09,027 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர்.

இன்று துவங்கிய 4 வது மலர் கண்காட்சியில் பெட்டுனியா, சால்வியா, செவ்வந்தி, ரோஜா, பெகோனியா, ஆந்தூரியம், பெண்டாஸ், சாமந்தி, டயாந்தஸ், சினியா, டெரினியா, கேலண்டுலா, கோழிக்கொண்டை, வாடாமல்லி, பான்ஸி, டெல்ஃபினியம், பால்சம், ஹைட்ராஞ்சியா, பாய்ன்செட்டியா, பென்ஸ்டிமான், டேலியா, கல்வாழை, சூரிய காந்தி, வெர்பினா, ஆன்டிரினம், ஜெரேனியம், பென்டாஸ், வயலா, ஜெர்பரா, ஆர்கிட்ஸ், நித்தியகல்யாணி, ப்ரிமுலா, வெட்சி, கேலா லில்லி, ஆஸ்டர், டெய்சி, போன்ற 50-க்கும் மேற்பட்ட வண்ண பூச்செடி வகைகளுடன் அலங்கரிக்கப்பட்ட யானை, பட்டாம் பூச்சி, ரெயில் பெட்டி, கப்பல் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட வடிவங்கள் இடம்பெற்றுள்ளது.

மேலும், டிரசினா, பைகஸ், கோலியஸ், அரேலியா, கார்டிலன், அக்லோனிமா, எராந்திமம், ஃபிலோடென்ட்ரான் போன்ற பல்வேறு அலங்கார இலைத்தாவரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, நா.எழிலன், துணைமேயர் மு.மகேஷ் குமார், நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண் உற்பத்தி ஆணையர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் தீ: நோயாளிகள் வெளியேற்றம்

சென்னை, 02 ஜனவரி 2025: ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புதிய கட்டிடத்தில் நள்ளிரவில் ஏற்பட்ட தீ விபத்தால், கரும்புகை ஏற்பட்டு நோயாளிகள் உடனடியாக வேறு தளத்துக்கு மாற்றப்பட்டனர். துரித நடவடிக்கை காரணமாக பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை புதிய கட்டிடம் 5 தளங்களில் செயல்பட்டு வருகிறது. இங்கு 500க்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நேற்று இரவு 11.30 மணியளவில் மருத்துவமனையின் இரண்டாவது தளத்தில் உள்ள இன்வெர்டர் அறையில் திடீரென தீப்பற்றி புகைமூட்டம் ஏற்பட்டது. இதனால் இரண்டாவது தளம் முழுவதும் கரும்புகை சூழ்ந்தது.

இதில் ஒரு சிலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. புகை மூட்டம் ஏற்பட்டதால் உள் நோயாளிகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள், அவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். அதிர்ச்சி அடைந்த மருத்துவமனை ஊழியர்கள் உடனடியாக மின்சாரத்தை துண்டித்தனர்.

உடனடியாக மருத்துவமனை பணியாளர்கள், பொதுமக்கள், காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர் இணைந்து மூன்றாவது, நான்காவது தளத்தில் இருந்த நோயாளிகளை அவசரமாக முதல் தளத்துக்கு மாற்றினர். இதில் செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டிருந்த ஒரு சில நோயாளிகள் முதல் தளத்தில் உள்ள அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

மற்ற நோயாளிகள் பழைய மருத்துவமனை கட்டிடத்துக்கு மாற்றப்பட்டனர். நல்வாய்ப்பாக இவ்விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும், இன்வெர்ட்டர் அறையில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக மருத்துவமனை நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தை அரசியலாக்குவது ஏன்?
விளம்பரத்திற்காக பா.ம.க. போராட்டம் ஐகோர்ட் நீதிபதி வேதனை

சென்னை, 02 ஜனவரி 2025: அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தை அரசியலாக்குவது ஏன்? என பா.ம.க. போராட்டத்தை சுட்டிக்காட்டி ஐகோர்ட் நீதிபதி வேதனை தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து அண்ணா தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தை அறிவித்தனர். இருப்பினும் ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி வழங்காததால் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றவர்களை போலீசார் கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

இந்த நிலையில் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமையை கண்டித்து பா.ம.க. சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. இதற்கும் போலீசார் அனுமதி வழங்கவில்லை. இருப்பினும் இன்று தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற சவுமிய அன்புமணி உள்ளிட்ட பா.ம.க.வினரை போலீசார் கைது செய்தனர்.

இதனிடையே அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து நடைபெற இருந்த போராட்டத்திற்கு அனுமதி மறுத்ததை எதிர்த்து பா.ம.க. வழக்கறிஞர் கே.பாலு சென்னை ஐகோர்ட்டில் முறையிட்டார்.

அப்போது நீதிபதி வேல்முருகன் கூறியதாவது:

போராட்டத்திற்கு அனுமதி தர உத்தரவிட முடியாது. பெண்கள் பாதுகாப்பில் உண்மையான கவனம் செலுத்தாமல் அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கை அரசியலாக்குவது ஏன் ? போராட்டம் நடத்தும் ஒவவொருவரும் முதலில் தங்கள் மனதில் கை வைத்து கூறுங்கள் பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று. இப்படி ஒரு சம்பவம் நடந்ததற்கு அனைவரும் வெட்க பட வேண்டும். இந்த விவகாரத்தை அனைவரும் அரசியலாக்கி வருகிறார்கள். இந்த விவகாரத்தை நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளது. காவல்துறை வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த விவகாரம் போராட்டம் நடத்துவதற்கான ஏற்புடையது அல்ல. வெறும் விளம்பரத்திற்காக இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளீர்கள். இந்த சமூகத்தில் ஆண் பெண் என்ற பாகுபாடு இருப்பது மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயம்.

இவ்விவகாரத்தை பத்திரிகையாளர்கள் பொறுப்புணர்வு இன்றி கடந்த 10 நாட்களாக விவாதம் செய்து வருகிறார்கள் என்று நீதிபதி வேதனை தெரிவித்தார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன், ஜனவரி 02, 2025

பொதுக்குழுவில் நடந்தது உட்கட்சி விவகாரம் எனக்கும் அன்புமணிக்கும் இடையே கருத்து வேறுபாடில்லை: ராமதாஸ் பேட்டி இளைஞர் அணி தலைவராக முகுந்தன் நியமனம்

சென்னை, 02 ஜனவரி 2025: பா.ம.க. பொதுக்குழுவில் நடந்தது உட்கட்சி விவகாரம். அன்புமணி உடன் கருத்து வேறுபாடு இல்லை. அவரிடம் பேசி சரியாகிவிட்டது' என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

பா.ம.க. இளைஞர் அணி தலைவராக முகுந்தன் பரசுராமனை அறிவித்துவிட்டோம். அவருக்கு நியமனக் கடிதமும் கொடுத்துவிட்டோம் என்றும் அவர் கூறினார்.

கடந்த வாரம் புதுச்சேரி அருகே நடந்த பா.ம.க. பொதுக்குழு கூட்டத்தில், மேடையிலேயே அக்கட்சி நிறுவனர் ராமதாசுக்கும், அவரது மகனான கட்சித் தலைவர் அன்புமணிக்கும் இடையே காரச்சார வாக்குவாதம் நடந்து பரபரப்பை ஏற்படுத்தியது. மாநில இளைஞர் அணி தலைவராக முகுந்தனை ராமதாஸ் அறிவித்ததுக்கு அன்புமணி எதிர்ப்பு தெரிவித்தார்.

ஆனால் 'நான் சொல்வதை தான் கேட்க வேண்டும். நான் உருவாக்கிய கட்சி இது," என்று அழுத்தமாக ராமதாஸ் இரண்டு முறை கூறினார். வாக்குவாதம் நடந்த மறுநாள், ராமதாசை சந்தித்து அன்புமணி சமரச பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த நிலையில் விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் இன்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

பொதுக்குழுக் கூட்டத்தில் பேசப்படும் விஷயங்கள், உட்கட்சி விவகாரம். பொதுக்குழுக் கூட்டத்தில் ஊடகவியலாளர்களை எந்தக் கட்சியினரும் அனுமதிக்கமாட்டார்கள். அந்த கூட்டத்தில் பா.ம.க. தலைவர் அன்புமணியும், நானும் பேசியது உட்கட்சி விவகாரம். அன்புமணி உடன் கருத்து வேறுபாடு இல்லை. அன்புமணி இங்கு வந்து என்னை சந்தித்து பேசினார். அவருடன் பேசினேன் பிரச்சினை சரியாகிவிட்டது.

பொதுக்குழுக் கூட்டத்தில் பாமக இளைஞர் அணி தலைவராக முகுந்தன் பரசுராமனை அறிவித்துவிட்டோம். அவருக்கு மறுநாளே நியமன கடிதமும் கொடுத்து விட்டோம். அவர் அந்தப் பதவியில் நீடிக்கிறாரா என்ற பேச்சுக்கே இடமில்லை. பொதுக்குழுவில் அறிவித்தபடி அடுத்தநாளே அவருக்கு நியமனம் கடிதம் கொடுத்துவிட்டேன்.

பொதுக்குழுவில் நடந்த விவகாரம் பா.ம.க.வின் வளர்ச்சியை பாதிக்காது. பா.ம.க. ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கட்சி சார்பில் நடக்கும், பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்களின்போது, என்னை விமர்சியுங்கள், என்னுடைய தவறுகளை விமர்சியுங்கள் என்றுதான் கூறுவேன். நேரடியாக என்னை விமர்சிக்க தயங்குபவர்கள், தொலைபேசி வழியாக என்னிடம் பேசுங்கள் அல்லது கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொள்வேன். இப்போதும் அதைத்தான் கூட்டங்களில் சொல்கிறேன்.

காரணம் நான் தவறு செய்வதை சுட்டிக்காட்டினால்தான் நான் திருத்திக் கொள்வேன். நான் சொல்வதெல்லாம் சரிதான் என்று கேட்டுச் சென்றால், என் தவறும் தெரியாது நான் திருத்திக்கொள்ளவும் முடியாது.

பத்திரிகையாளர் சந்திப்புகளில் கூட எந்த கேள்வி கேட்டாலும் எனக்கு கோபம் வருவதில்லை. எதற்காக கோபம் வரவேண்டும். ஒரு கட்சியின் தலைவர் உள்ளிட்ட எந்த பதவியில் இருப்பவர்களுக்கும் பத்திரிகையாளர்கள் எந்த கேள்வி கேட்டாலும் கோபம் வரக்கூடாது.

தமிழக காவல்துறை ஸ்காட்லாந்து போலீசாருக்கு இணையாக போற்றப்பட்டது. இப்போது முற்றிலுமாக முடங்கி விட்டது. அதாள பாதாளத்திற்கு சென்றுள்ளது.

முதலமைச்சர் 2 மாதங்களுக்கு ஒரு முறை கலந்தாய்வு மேற்கொள்ள வேண்டும். காவல்துறையை சுதந்திரமாக செயல்பட விட வேண்டும். தமிழ்நாட்டை மது இல்லா மாநிலமாக மாற்றப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்தது அரசு. இளைஞர்கள் சீரழிவதை வேடிக்கை பார்க்க முடியாது. தவறுகளும், தோல்விகளையும் மறைக்க தங்களது தோல்விகளை மறைக்க போராட்டம் நடத்தப்படும் கட்சிகள் மீது அடக்குமுறை கையில் எடுத்து வருகிறது. போராட்டம் செய்யக்கூடாது என்று கைது செய்யப்படுகின்றனர்.

தி.மு.க. ஆட்சியின் இந்த அடக்குமுறை இந்த ஆட்சியின் தோல்வியை ஒப்புக்கொள்கிறது. எதிர்க்கட்சியை அடக்குவது மூலம் தங்களது தோல்வியை ஒப்புக்கொள்கிறது. தி.மு.க. ஆட்சியின் நாட்கள் எண்ணப்பட்டு வருகிறது. சட்ட பேரவை தேர்தல் எப்போது நடந்தாலும் தோல்வியை சந்திக்கும். அரசு பள்ளிகளை மேம்படுத்த தனியார் பள்ளிகளிடம் உதவி பெறும் முடிவை அரசு கைவிட வேண்டும். இவ்வாறு ராமதாஸ் கூறினார்.

தஞ்சை மாநகராட்சியில் நிர்வாக ரூசுகாதார சீர்கேடுகளைக் கண்டித்து ரெயிலடி தபால் நிலையம் அருகில் 8-ந் தேதி ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, 02 ஜனவரி 2025: தஞ்சாவூர் மாநகராட்சியில் நிலவி வரும் நிர்வாக சீர்கேடுகள், சுகாதார சீர்கேடுகள், பல்வேறு வகை வரி உயர்வு, ஆதாய நோக்கத்துடன் நடைபெறும் முறைகேடுகள் மற்றும் அண்ணா தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை மடைமாற்றம் செய்து ஸ்டிக்கர் ஒட்டுதல் முதலான மக்கள் விரோதச் செயல்களைக் கண்டும் காணாமல் இருந்து வரும் தி.மு.க. அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து, தஞ்சாவூர் மாநகரக் கழகத்தின் சார்பில் 8 ந் தேதி புதன் கிழமை ரயிலடி தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் ஆட்சி ஒரு குடும்ப ஆட்சி என்று நான் அவ்வப்போது குறிப்பிட்டு வருகிறேன். ஸ்டாலின் மாடல் ஆட்சியில் கொண்டுவரப்படும் திட்டங்கள் அனைத்தும் ஒரு குடும்பத்தின் நலன் சார்ந்தே செயல்படுத்தப்படுகின்றன. இதற்கு பல்வேறு உதாரணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

'முன்னேர் எப்படியோ, பின்னேரும் அப்படியே' என்ற பழமொழிக்கேற்ப, மக்கள் பணியாற்றுவதற்காக பல்வேறு நிலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சி என்ற அதிகாரத் தோரணையில், ஆதாய நோக்கத்துடன் செயல்பட்டு வருவதோடு, பல்வேறு மக்கள் விரோதச் செயல்களிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக, மக்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த வகையில், தஞ்சாவூர் மாநகராட்சி நிர்வாகத்தில், அதிகாரப் பதவியில் அமர்ந்துள்ள தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களால் நிகழ்த்தப்பட்டு வரும் பல்வேறு ஊழல் முறைகேடுகள்; அதிகார துஷ்பிரயோகங்கள் பின்வருமாறு:

* மாநகராட்சி நிர்வாகம் சொத்து வரி உள்ளிட்ட பல்வேறு வரிகளை கடுமையாக உயர்த்தி உள்ளது. இதன் காரணமாக, மக்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர்.

* 40 வது வட்டம், அருளானந்தம்மாள் நகரில் பள்ளிக்கூடம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை, தி.மு.க. மாநகராட்சி மேயர் சுயலாபத்தோடு மனைப்பிரிவுகளாக மாற்றுவதற்கு மாநகராட்சி மாமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டதாகவும், இது சம்பந்தமாக தனிநபர் ஒருவரால் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

* ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில், குப்பைக் கிடங்கில் குப்பை அகற்றும் டெண்டரில் முறைகேடு நடந்துள்ளதாக, லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

* மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பராமரிப்புப் பணியை மேற்கொள்ளும் நிறுவனம், இப்பணியை முறையாக செய்யாத காரணத்தால், சாக்கடை நீர் சாலைகளில் வழிந்தோடும் அவல நிலை நீடிக்கிறது.

* மாநகராட்சிக்கு சொந்தமான பல்வேறு இடங்களை ஆதாய நோக்கத்துடன் வணிக நிறுவனம் மற்றும் தங்களுக்கு வேண்டப்பட்டவர்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கும் செயலில் தி.மு.க.-வைச் சேர்ந்த மாநகராட்சி மேயர் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தொடர்ந்து புகார் தெரிவிக்கின்றனர்.

அம்மா அவர்களின் நல்லாசியோடு செயல்பட்ட கழக ஆட்சியில்,

* புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் சுமார் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரங்கம் கட்டப்பட்டு முடியும் தருவாயில், ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. அரசு ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு இந்த அரங்கத்திற்கு பெயர் மாற்றம் செய்து திறந்து வைத்துள்ளது.

இங்கு திருமண நிகழ்ச்சிகள் மற்றும் பொதுமக்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வாடகைக்கு விடப்படும் என மாநகராட்சியால் அறிவிக்கப்பட்டு, பின்னர், ஆதாய நோக்கத்துடன் வேறு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்துள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

* ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், திருவையாறு பேருந்து நிலையத்தில் புதிய வணிக வளாகம் வாகன நிறுத்துமிடத்துடன் கட்டப்பட்டது. தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் இவ்வளாகம் திறக்கப்பட்டு கடைகள் ஏலம் விடப்பட்டதாகவும், தற்போது வாகனங்கள் நிறுத்தும் இடத்தை கடைகளாக மாற்றி முறையாக ஏலம் நடத்தாமல் ஆதாய நோக்கத்தோடு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

தி.மு.க. அரசு பதவியேற்ற நாளில் இருந்து, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, மக்கள் நலன் கருதி கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தாமலும், ஒருசில திட்டங்களை, அவர்கள் கொண்டுவந்ததுபோல் ஸ்டிக்கர் ஒட்டி மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதும் தொடர்கதையாக நிகழ்ந்து வருகிறது. தி.மு.க. அரசின் இத்தகைய செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில், தஞ்சாவூர் மாநகராட்சியில் நிலவி வரும் நிர்வாகச் சீர்கேடுகள், சுகாதார சீர்கேடுகள், பல்வேறு வகை வரி உயர்வு, ஆதாய நோக்கத்துடன் நடைபெறும் முறைகேடுகள் மற்றும் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தாமல், அண்ணா தி.மு.க. தஞ்சாவூர் மாநகரக் கழகத்தின் சார்பில், 8 ந் தேதி புதன் கிழமை காலை 10 மணியளவில், ரயிலடி தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செ.செம்மலை தலைமையிலும்; அமைப்புச் செயலாளர் ஆர்.காந்தி, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் எம்.சேகர்; தஞ்சாவூர் மாநகரச் செயலாளர் என்.எஸ்.சரவணன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தஞ்சாவூர் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த கழக சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னாள் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. அரசு மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், வியாபாரிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

எஸ்.வி.சேகருக்கு ஒரு மாதம் சிறை உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

சென்னை, 02 ஜனவரி 2025: சமூக வலைத்தளங்களில் பெண் பத்திரிக்கையாளர்கள் குறித்து சர்ச்சை கருத்தை பதிவிட்ட வழக்கில் பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த பிரபல காமெடி நடிகர் எஸ்.வி.சேகருக்கு விதிக்கப்பட்ட ஒரு மாத சிறை தண்டனையை உறுதி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு பெண் பத்திரிகையாளர்கள் குறித்து தரக்குறைவாக விமர்சிக்கப்பட்டதை அவர் தனது முகநூல் பக்கத்தில் பகிர்ந்திருந்தார்.

இதைத் தொடர்ந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் செயலாளர் மிதார் மொய்தின் அளித்த புகாரின் அடிப்படையில், சென்னை மத்திய குற்றப்பிரிவினர், இந்திய தண்டனை சட்டம் மற்றும் பெண்கள் மீதான கொடுமைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் அவர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

சென்னை எம்.பி.எம்.எல்.ஏ. மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்தது. நடிகர் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாதம் சிறை தண்டனையும் 15 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து உத்தரவிட்டது.

சிறப்பு நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நடிகர் எஸ் வி. சேகர் தாக்கல் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கில் மறு உத்தரவு வரும்வரை நடிகர் எஸ்.வி. சேகருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை சென்னை உயர்நீதிமன்றம் நிறுத்திவைத்து உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் வழக்கில் இன்று இறுதி தீர்ப்பு வழங்கிய நீதிபதி பி.வேல்முருகன், நடிகர் எஸ்.வி. சேகருக்கு வழங்கிய ஒரு மாத சிறை தண்டனையை உறுதி செய்து மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்துள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

டிரம்ப் ஓட்டலுக்கு வெளியே டெஸ்லா கார் வெடித்தது

சென்னை, 02 ஜனவரி 2025: டிரம்பின் ஓட்டலுக்கு வெளியே எலன் மாஸ்க்குக்கு சொந்தமான டெஸ்லா நிறுவனத்தின் கார் ஒன்று வெடித்து சிதறியுள்ளது.

அமெரிக்காவின் லாஸ் வேகாஸில், அமெரிக்க புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டிருக்கும் டொனால்ட் டிரம்புக்கு சொந்தமான டிரம்ப் இன்டர்நேஷனல் ஓட்டல் இருக்கிறது. ஓட்டல் நுழைவாயிலில் டிரம்பின் நெருங்கிய நண்பரான எலான் மஸ்க்குக்கு சொந்தமான டெஸ்லா நிறுவனத்தின் டெஸ்லா கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. உள்ளூர் நேரம் காலை 8:40 மணிக்கு அந்தக் கார் திடீரென வெடித்து தீப்பற்றியது. இந்த சம்பவத்தில் காரின் ஓட்டுநர் உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பாக வெளியான சிசிடிவி காட்சியில், காரிலிருந்து பட்டாசு வெடிப்பதைப் போல திடீரென சிறு சிறு வெடிப்பு நடக்கிறது. அது அப்படியே பெரிதாக வெடித்து தீப்பற்றுகிறது. அதிகாலை 3:30 மணியளவில் லூசியானாவின் நியூ ஆர்லியன்ஸில் தாறுமாறாக ஓடிய கார் மோதி 15 பேர் பலியான நிலையில், அமெரிக்க ராணுவ வீரர் ஷம்சுத்-தின் ஜபார் என்பவர் கைது செய்யப்பட்டார். அதுபோன்றதொரு தாக்குதலாக ஓட்டலுக்கு வெளியே நடந்த தாக்குதலும் இருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகித்து விசாரித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து எலான் மஸ்க், "லாஸ் வேகாஸில் உள்ள ட்ரம்ப் இன்டர்நேஷனல் ஓட்டலுக்கு வெளியே சைபர்ட்ரக் வெடித்ததற்கும், அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸில் நடந்த பயங்கரமான சம்பவத்தில் 15 பேர் பலியான சம்பவத்திற்கும் தொடர்பு இருக்கலாம். இந்த இரண்டு சம்பவங்களிலும் சம்பந்தப்பட்ட வாகனங்கள் ஒரே கார் வாடகை தளமான டுராவில் வாடகைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

டிரம்ப் ஹோட்டல் வெளியே டெஸ்லா கார் தீப்பிடித்ததற்கு காரின் கோளாறு காரணமல்ல. தீவிரவாத செயல் போல் தெரிகிறது. காரில் பட்டாசு போன்ற ஏதோ ஒன்று இருந்திருக்கிறது. அது வெடித்ததால்தான் கார் தீப்பற்றியிருக்கிறது. இது தொடர்பாக எங்கள் நிறுவனம் ஆய்வு செய்து, விசாரித்து வருகிறோம்" என்று கூறி உள்ளார்.

சிவகாசியில் காலண்டர் விற்பனை ரூ.400 கோடி: உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி

சென்னை, 02 ஜனவரி 2025: சிவகாசியில் '2025'ம் ஆண்டுக்கான தினசரி காலண்டர்கள் விற்பனை சுமார் 400 கோடி ரூபாயை கடந்துள்ளது என உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் பல்வேறு விதமான காலண்டர்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. தினசரி காலண்டர்கள் தயாரிப்பு பணிகள் பிரதானமாக இருந்து வருகிறது. தினசரி காலண்டர் தயாரிப்பில் மட்டும் சுமார் 50 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் இதனை சார்ந்து நூற்றுக்கணக்கான அச்சகங்களும் ஈடுபட்டு வருகின்றன. ஒரு ஆண்டில் 6 மாதங்கள் காலண்டர் அச்சிடும் பணிகளும் மற்ற இதர பணிகளும் நடைபெறும்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் தமிழ் புத்தாண்டு பஞ்சாங்கம் வெளியானவுடன் அடுத்தாண்டிற்கான காலண்டர் தயாரிப்பு பணிகள் தொடங்கப்படும். மேலும் ஆகஸ்ட் மாதம் முதல் ஜனவரி வரை காலண்டர் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது முழுமையாக தயார் செய்யப்பட்ட காலண்டர்கள் வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களுக்கு அனுப்பும் பணிகளும் தொடர்ந்து நடைபெறுகிறது.

சிவகாசி காலண்டர்கள் மிகவும் தரமானதாகவும் புதுமைகள் நிறைந்திருப்பதாலும் நல்ல வரவேற்பு உள்ளது. தமிழ்நாடு மட்டுமல்லாமல் புதுச்சேரி, கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் சிவகாசியில் தயாராகும் காலண்டர்களுக்கு நிறைய ஆர்டர்கள் கிடைத்து வருகிறது. இந்த ஆண்டு காலண்டர் தயாரிப்பு பணிகள் துவங்கியதிலிருந்தே விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது.

இது வரை சுமார் 90 சதவிகித ஆர்டர்களுக்கான காலண்டர்கள் தயாரித்து முடித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள ஆர்டர்களும் வரும் தைப் பொங்கல் திருநாளுக்குள் முடித்து கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. இந்தாண்டு காலண்டர்கள் விற்பனை சுமார் 400 கோடி ரூபாயை கடந்துள்ளது எனவும் கடந்தாண்டைவிட விற்பனை அதிகமாக இருந்ததாகவும் காலண்டர் தயாரிப்பு நிறுவனங்களின் நிர்வாகிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.240 உயர்வு

சென்னை, 02 ஜனவரி 2025: 22 காரட் ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.57,440 க்கு விற்பனையாகிறது.

புத்தாண்டின் முதல் நாளான நேற்று சவரனுக்கு ரூ.320 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.57,200க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.40 அதிகரித்து, ரூ.7,150க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் இன்று ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ரூ.7,180-க்கும், சவரனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.57,440-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி கிராமுக்கு ரூ.1 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.99க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.99,000 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

நெட்பால் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழக ஆடவர் அணி சாம்பியன்

சென்னை, 02 ஜனவரி 2025: சென்னையை அடுத்த கவரைப்பேட்டை ஆர்எம்கே பள்ளியில் 30-வது தேசிய சப் ஜூனியர் நெட்பால் சாம்பியன்ஷிப் நடைபெற்றது. 27 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் ஆடவர் பிரிவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தமிழக அணி, கேரளாவை எதிர்த்து விளையாடியது. இதில் தமிழக அணி 29- 18 என்ற கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது. அதிகபட்சமாக முகமது வஹித் 18 கோல்கள் செலுத்தினார்.

3-வது இடத்துக்கான ஆட்டத்தில் தெலங்கானா 24- 22 என்ற கணக்கில் ஹரியானாவை தோற்கடித்தது. சாம்பியன் பட்டம் வென்ற தமிழக அணிக்கு ஆர்எம்கே கல்விக்குழுமங்களின் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம் பரிசு கோப்பையை வழங்கினார்.

நிகழ்ச்சியில் இந்திய நெட்பால் சம்மேளத்தின் தலைவர் சுமன் கவுசிக், பொதுச்செயலாளர் விஜேந்தர் சிங், ஆர்எம்கே கல்விக்குழுமங்களின் துணைத்தலைவர்கள் ஆர்.எம்.கிஷோர், துர்காதேவி பிரதீப், செயலாளர் யலமஞ்சி பிரதீப், தமிழ்நாடு நெட்பால் சங்கத்தின் தலைவர் பி.செல்வராசு, ஆர்எம்கே உண்டு உறைவிட பள்ளி முதல்வர் ஷப்னா சங்க்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போட்டி: வெண்கலப் பதக்கம் வென்றார் ஆர்.வைஷாலி

சென்னை, 02 ஜனவரி 2025: உலக பிளிட்ஸ் செஸ் போட்டியின் பெண்கள் பிரிவில் இந்தியாவின் வைஷாலிக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

உலக ரேபிட் மற்றும் பிளிட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டி அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடந்தது. இதன் ரேபிட் வடிவிலான போட்டியில் ஓபன் பிரிவில் ரஷிய வீரர் வோலோதர் முர்சினும், பெண்கள் பிரிவில் இந்தியாவின் கோனேரு ஹம்பியும் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து மின்னல் வேகத்தில் காய்களை நகர்த்தக்கூடிய பிளிட்ஸ் வடிவிலான போட்டி இரு நாட்கள் நடந்தன.

பிளிட்ஸ் ஆட்டம் 3 நிமிடம் கொண்டது. அத்துடன் ஒவ்வொரு நகர்வுக்கும் 2 வினாடி கூடுதலாக வழங்கப்படும். இதன் ஓபன் பிரிவில் 13 சுற்று முடிவில் 'நம்பர் ஒன்' வீரரும், 5 முறை உலக சாம்பியனுமான மாக்னஸ் கார்ல்சென் (நார்வே) உள்பட 8 வீரர்கள் கால்இறுதிக்கு முன்னேறினர். கார்ல்சென் கால்இறுதியில் அமெரிக்காவின் ஹன்ஸ் நீமனையும், அரைஇறுதியில் ஜான் கிரிஸ்டோப் டுடாவையும் (போலந்து) வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இதே போல் 8-ம் நிலை வீரரான ரஷியாவின் இயான் நெபோம்னியாச்சி கால்இறுதியில் ரஷியாவின் வோலோதர் முர்சினையும், அரைஇறுதியில் வெஸ்லி சோவையும் (அமெரிக்கா) விரட்டியடித்து இறுதிசுற்றை எட்டினார்.

இதையடுத்து மகுடம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இறுதி சுற்றில் கார்ல்சென், இயான் நெபோம்னியாச்சி கோதாவில் குதித்தனர். இது 4 ஆட்டங்களை கொண்டது. முதல் ஆட்டத்தில் கருப்பு நிற காய்களுடன் ஆடிய கார்ல்சென் 57-வது நகர்த்தலிலும், 2-வது ஆட்டத்தில் வெள்ளை நிற காய்களுடன் ஆடி 36-வது நகர்த்தலிலும் வெற்றி பெற்றார். அடுத்த ஆட்டத்தில் 'டிரா' செய்தாலே வாகை சூட முடியும் என்ற சூழலில் கார்ல்சென், கடைசி இரு சுற்றில் அடுத்தடுத்து தோல்வியை தழுவினார். இதனால் ஆட்டம் 2- 2 என்ற புள்ளி கணக்கில் சமநிலையை அடைந்தது. வெற்றியாளரை தீர்மானிக்க 'சடன்டெத்' முறை கொண்டு வரப்பட்டது. இதில் தொடர்ச்சியாக 3 ஆட்டங்கள் டிரா ஆனது.

நீயா -நானா? என்ற போராட்டம் நீடித்ததால் தளர்ந்து போன கார்ல்சென், கோப்பையை இருவரும் பகிர்ந்து கொள்ளலாம் என்று நெபோம்னியாச்சியிடம் கூறினார். இந்த யோசனையை அவரும் ஏற்றுக் கொண்டதால் சாம்பியன்ஷிப் பட்டம் இருவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. உலக பிளிட்ஸ் செஸ் வரலாற்றில் இருவர் கூட்டாக கோப்பையை வெல்வது இதுவே முதல் முறையாகும். மொத்தத்தில் உலக பிளிட்ஸ் சாம்பியன்ஷிப்பை கார்ல்சென் ருசிப்பது இது 8-வது முறையாகும்.

பெண்கள் பிரிவில் 11 சுற்றுகள் முடிவில் தமிழகத்தின் ஆர். வைஷாலி உள்பட 8 வீராங்கனைகள் கால்இறுதிக்கு தகுதி பெற்றனர். கால்இறுதியில் வைஷாலி, சீனாவின் ஜூ ஜினரை சந்தித்தார். இதில் முதல் ஆட்டத்தில் தோல்வியை தழுவிய வைஷாலி அடுத்த ஆட்டத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தார். 3-வது ஆட்டம் டிரா ஆக, இருவரும் 1.5 -1.5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர். 4-வது ஆட்டத்தில் கருப்புநிற காய்களுடன் ஆடிய வைஷாலி 49-வது நகர்த்தலில் 'செக்' வைத்து வெற்றியை வசப்படுத்தி அரைஇறுதிக்குள் நுழைந்தார்.

அரைஇறுதியில் வைஷாலி, உலக சாம்பியன் சீனாவின் ஜூ வென்ஜூனை சந்தித்தார். இதில் முதல் ஆட்டத்தில் 'டிரா' கண்ட வைஷாலி, அடுத்த இரு ஆட்டங்களில் தோற்று இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்தார். இதனால் வைஷாலிக்கு வெண்கலப்பதக்கமே கிட்டியது. இறுதி ஆட்டத்தில் ஜூவென்ஜூன், சக நாட்டவர் லீ டிங்ஜியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கையில் ஏந்தினார்.

வைஷாலியை பாராட்டி சர்வதேச செஸ் சம்மேளனத்தின் (பிடே) துணைத் தலைவர் விஸ்வநாதன் ஆனந்த் வெளியிட்ட பதிவில், 'வெண்கலம் வென்ற வைஷாலிக்கு வாழ்த்துகள். ஆற்றல் மிகுந்த திறனை வெளிப்படுத்தி 'நாக்-அவுட்' சுற்றுக்கு தகுதி பெற்றார். 2024-ம் ஆண்டை சிறப்பான வழியில் நிறைவு செய்துள்ளீர்கள். ஒரு உலக சாம்பியன் ஹம்பி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்ற வைஷாலி கிடைத்திருக்கின்றனர்' என்றார்.

ஓபன் பிரிவில் பட்டத்தை பகிர்ந்தது குறித்து கார்ல்சென் கூறுகையில், 'நாங்கள் இருவரும் நீண்ட நேரம் விளையாடியதால் சோர்வடைந்து விட்டோம். சடன்டெத்தில் 3 ஆட்டம் டிரா ஆனது. என்னால் தொடர்ந்து விளையாட முடியும் என்றே நினைத்தேன். ஆனால் வெற்றியை பகிர்ந்து கொள்வது அருமையான தீர்வாகும். இந்த போட்டியை முடிக்க இது ஒரு நல்ல வழி' என்றார்.

பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அ.தி.மு.க. நிர்வாகிகள் புத்தாண்டு வாழ்த்து

சென்னை, 02 ஜனவரி 2025: அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை, சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், எஸ்.பி.வேலுமணி, டாக்டர் சி.விஜயபாஸ்கர், மா.பா. பாண்டியராஜன், மணிகண்டன், இன்பத்தமிழன், உள்ளிட்டோர் நேற்று நேரில் சந்தித்து புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

அதேபோல அமைப்பு செயலாளர்கள் வி.ராமு, ராயபுரம் மனோ, பா.சீனிவாசன், கொள்கை பரப்பு துணைச்செயலாளர் அய்யாத்துரை பாண்டியன், செய்தி தொடர்பாளர் நிர்மலா பெரியசாமி மற்றும் ம.தனபால், காயத்ரி தனபால், பி.வி.பாரதி, வி.ராதாகிருஷ்ணன் உள்பட நிர்வாகிகள் சந்தித்து புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்து கொண்டனர்.

அப்போது நிர்வாகிகளுக்கும் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்தார்.

இந்திய ஏ சி வர்த்தகத்தில் பெரியளவில் கால்பதிக்கும் சாம்சங் 2025 இல் அதன் புதிய விண்ட்ஃப்ரீ மாடல்களை அறிமுகப்படுத்தவுள்ளது

கோயம்புத்தூர், 02 ஜனவரி 2025: இந்தியாவின் சிறந்த நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், 2025 ஆம் ஆண்டில் ஒரு டஜன் ஏர் கண்டிஷனர் மாடல்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. தொழில் வல்லுநர்களின் கூற்றுப்படி, இந்தத் தென் கொரிய வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் நிறுவனம் தனது நுகர்வோர் தளத்தை விரிவுபடுத்தி, இந்தியாவில் அறை ஏசி பிரிவில் விருப்பமான பிராண்டாக மாறவுள்ளது. சாம்சங்கின் புதிய ஏசி மாடல்கள் நிறுவனத்தின் தனியுரிமமான பெஸ்போக் ஏ ஐ தீர்வுகளால் இயக்கப்படும் மற்றும் பிரீமியம் ஏ சிகளை வாங்க விரும்பும் நுகர்வோரை இலக்காகக் கொண்டிருக்கும். குளிர்சாதன பெட்டி மற்றும் வாஷிங் மெஷின் வகைகளில் சாம்சங்கின் பெஸ்போக் ஏ ஐ வரம்பில் உள்ள வீட்டு உபயோகப் பொருட்கள் இந்திய சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன, மேலும் இது சாம்சங் ரூம் ஏர் கண்டிஷனர் பிரிவில் விரிவடைவதற்கு வலுவான தொடக்கத்தை அளிக்கிறது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சாம்சங்கின் புதிய ஏசி வகையினம், வேகமான மற்றும் சௌகரியமான குளிர்ச்சி, ஆற்றல் சேமிப்பு, சொகுசு மற்றும் நீடித்து உழைக்கும் தன்மை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் சக்திவாய்ந்த ஏர் கண்டிஷனருக்கான நுகர்வோரின் தேவையை நிவர்த்தி செய்யும் என்று திட்டத்தைப் பற்றி அறிந்த டீலர்கள் தெரிவித்தனர். இந்திய ரூம் ஏர் கண்டிஷனர் (ஆர் ஏ சி) தொழில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கான பாதையில் உள்ளது, பல ஆய்வாளர்கள் 2025 ஆம் ஆண்டில் விற்பனை அளவு 20% வரை உயரும் என்று கணித்துள்ளனர்.

கே.வி.என். புரொடக்ஷன்ஸ் & தெஸ்பியன் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் படத்தில் இணையும் மஞ்சும்மல் பாய்ஸ் சிதம்பரம் & ஆவேஷம் ஜித்து மாதவன்..!!

சென்னை, 02 ஜனவரி 2025: திரு. வெங்கட் கே நாராயணா சார்பில் கே.வி.என். புரொடக்ஷன்ஸ் நிறுவனம் திருமதி. சைலஜா தேசாய் ஃபென்-இன் தெஸ்பியன் ஃபிலிம்ஸ் உடன் கூட்டணி அமைப்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது. அதன்படி இரு நிறுவனங்கள் இணைந்து மலையாள திரையுலகின் இரண்டு இளம் இயக்குநர்கள் இணையும் புதிய படத்தை உருவாக்க இருக்கின்றன.

இந்தப் படத்தை மஞ்சும்மல் பாய்ஸ் படத்தின் இயக்குநர் சிதம்பரம் இயக்க, ஆவேஷம் படத்தின் இயக்குநர் ஜித்து மாதவன் எழுதுகிறார். இந்தப் படத்தில் திரைத்துறையில் முன்னணி தொழில்நுட்ப கலைஞர்கள்: ஷைஜூ காலெத் ஒளிப்பதிவு, சுஷின் ஷியாம் இசை மற்றும் விவேக் ஹர்ஷன் படத்தொகுப்பு செய்கின்றனர்.



படம் குறித்து கே.வி.என். புரொடக்ஷன்ஸ் சார்பில் தயாரிப்பாளர் திரு. வெங்கட் கே நாராயணா பேசும் போது, "எங்கள் குறிக்கோள் எப்போதும், பல மொழிகளில் திரைப்பட அனுபவத்தை புதுப்பிப்பதாகவே இருந்துள்ளது. அந்த வகையில் இந்தப் படம் மூலம் நாங்கள் மலையாள திரையுலகில் களமிறங்குகிறோம். ரசிகர்கள் எங்களிடம் எதிர்பார்க்கும் பிரமாண்டம் மற்றும் சிறப்பான கதையம்சம் இந்தப் படத்தில் இருக்கும். மிகவும் தலைசிறந்த குழுவுடன் இணைவதால், அந்த விஷயத்தில் நாங்கள் அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறோம்," என்று தெரிவித்தார்.

இயக்குநர் சிதம்பரம் பேசும் போது, "கதைகளை சொல்லும் என் ஆசையை பகிர்ந்து கொள்ளும் குழுவுடன் பணியாற்ற இருப்பது மிகுந்த ஆர்வத்தை தூண்டுகிறது. இந்த கூட்டணியை நான் அதிகம் எதிர்பார்க்கிறேன், இந்த குறிக்கோளை நிஜமாக்கும் தருணத்திற்காக காத்திருக்க முடியவில்லை," என்று கூறினார்.

எழுத்தாளர் ஜித்து மாதவன் கூறும் போது, "இந்தக் கதை என் மனதுக்கு மிகவும் நெருக்கமான ஒன்று. தலைசிறந்த குழுவுடன் இணைந்து, சிறப்பான ஒன்றை உருவாக்குவோம் என்பதில் நான் அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறேன்," என்றார்.

2025 ஆம் ஆண்டு துவங்கும் இந்த வேளையில் கே.வி.என். நிறுவனம் கன்னட மொழியில் யாஷ் நடிக்கும் டாக்சிக், தமிழில் விஜய்யின் தளபதி 69, இந்தி மொழியில் பிரியதர்ஷன் இயக்கும் திரில்லர் படங்களுடன் தற்போது மலையாள துறையிலும் கால்பதிக்கிறார்கள். இதன் மூலம் கே.வி.என். தயாரிப்பு நிறுவனம் பலம் கூடுவதோடு, பொழுதுபோக்கு துறையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகவும் மாறி இருக்கிறது.

தனது வலையமைப்பு முழுவதிலும் ஆயுள் காப்பீடு திட்டங்களை வழங்க ஸ்ரீராம் லைஃப் இன்சூரன்ஸ் உடன் இணைந்து செயல்படும் வக்ராங்கி லிமிடெட்

சென்னை, 02 ஜனவரி 2025: இந்தியாவில் இறுதிநிலை வினியோக செயல்தளங்களுள் மிகப்பெரிய நிறுவனம் என புகழ்பெற்றிருக்கும் வக்ராங்கி லிமிடெட், பிரபல ஆயுள் காப்பீட்டு நிறுவனமான ஸ்ரீராம் லைஃப் இன்சூரன்ஸ் உடன் ஒரு உத்தி வாய்ந்த கார்ப்பரேட் ஏஜென்சி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதை அறிவிப்பதில் பெருமை கொள்கிறது. நாடெங்கிலும் உள்ள வக்ராங்கி கேந்திரா வலையமைப்புகள் வழியாக ஆயுள் காப்பீட்டின் விரிவான தொகுப்பின் கீழ் திட்டங்களுக்கு எளிதான அணுகுவசதியை வழங்குவதே இக்கூட்டாண்மையின் நோக்கமாகும். காப்பீடு திட்டங்கள் வழங்கப்படாத மற்றும் போதுமான அளவு கிடைக்கப்பெறாத பகுதிகளில் அமைந்துள்ள வக்ராங்கி கேந்திராக்கள் இந்த ஆயுள் காப்பீடு திட்டங்களின் பரவலான தொகுப்பை மக்களுக்கு வழங்குவதற்கு இந்த ஒத்துழைப்பு ஏதுவாக்கும். இக்கூட்டாண்மையை திறம்பட பயன்படுத்துவதன் வழியாக காப்பீடு தீர்வுகள் எளிதான வழிமுறைகளில் கிடைக்கும் நிலையை மேம்படுத்தி, நிதிசார் பாதுகாப்பை வாடிக்கையாளர்கள் பெற்று பயனடைவதை உறுதி செய்வது இதன் நோக்கமாகும். வக்ராங்கி லிமிடெட் - ன் நிர்வாக இயக்குனர் திரு. வேதாந்த் நந்த்வானா இக்கூட்டாண்மை செயல்பாடு குறித்து கூறியதாவது: "அத்தியாவசிய தேவைகளின் எமது பெரிய தொகுப்பை மேலும் விரிவாக்குவதற்கு ஸ்ரீராம் லைஃப் இன்சூரன்ஸ் உடன் கூட்டாக இணைந்து செயல்படுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். அனைத்து தரப்பு மக்களும் நிதிசார் திட்டங்களின் பலனைப் பெறுமாறு ஒருங்கிணைக்கப்பட வேண்டும் மற்றும் அமைவிடம் எதுவாக இருப்பினும், ஒவ்வொரு இந்தியருக்கும் உயர்தர காப்பீடு திட்டங்களுக்கு இறுதிநிலை அணுகுவசதியை வழங்க வேண்டுமென்ற எமது தொலைநோக்குப் பார்வைக்கு இணக்கமானதாக இத்திட்டம் அமைந்திருக்கிறது." வக்ராங்கி கேந்திராக்கள் என்பவை, பிராண்டின் கீழ் பிரத்யேக வடிவில் இயங்கும் அலுவலகங்களாகும். வங்கி செயல்பாடுகள், காப்பீடு, ஏடிஎம், உதவப்படும் மின் - வர்த்தகம், மின் - ஆளுகை மற்றும் முழுமையான உடல்நலப் பராமரிப்பு ஆகிய பிரிவுகளில் விரிவான தொகுப்பின் கீழ் திட்டங்களையும், சேவைகளையும் இவை மக்களுக்கு வழங்குகின்றன. நிலை 4 முதல் 6 வரையிலான சிறு நகரங்கள் / கிராமப்புறங்கள் போன்ற அமைவிடங்களில் 83% வக்ராங்கி கேந்திரா அவுட்லெட்கள் அமைந்திருப்பதால் நாட்டின் மிக தொலைதூரப் பகுதிகளில் உள்ள அதன் வாடிக்கையாளர்கள் காப்பீடு சேவைகளுக்கு அணுகுவசதியைப் பெற இந்த ஒத்துழைப்பு உடன்பாடு வக்ராங்கியை ஏதுவாக்கும். "எமது வாடிக்கையாளர்களின் மாறுபட்ட பல்வேறு தேவைகளுக்கும் ஒற்றை நிறுத்தத் தீர்வை அவர்களுக்கு வழங்குவதற்காக முன்னணி பிசினஸ் நிறுவனங்களோடு கூட்டு முயற்சி ஒப்பந்தங்களில் ஈடுபடுவதையும், இன்னும் அதிக திட்டங்கள் மற்றும் சேவைகளை எமது சேவைத்தொகுப்பில் சேர்ப்பதையும் நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம். இந்தியாவெங்கும் அதிக நம்பிக்கைக்குரிய அமைவிடம் சார்ந்த சேவை வழங்கல் அமைவிடமாகவும் மற்றும் ஆன்லைன் கன்வீனியன்ஸ் ஸ்டோராகவும் செயல்பட நாங்கள் விரும்புகிறோம். 'முழு உலகமும் இப்போது அருகில் உள்ளது' என்ற வக்ராங்கி கேந்திராவின் புதிய கோட்பாடு மற்றும் இலக்கை நோக்கி நேர்மறையான முன்னேற்ற நடவடிக்கையை நாங்கள் எடுத்து வருகிறோம்." என்று அவர் மேலும் கூறினார்.

யமஹா தமிழ்நாடு வாடிக்கையாளர்களுக்கு எஃப்இசட் சீரிஸ், ஃபேசினோ மற்றும் ரேஇசட்ஆர் மாடல்களில் சிறப்பு பொங்கல் சலுகைகளை அறிவிக்கிறது

சென்னை, 02 ஜனவரி 2025: இந்தியா யமஹா மோட்டார் அதன் பிரபலமான இரு சக்கர வாகனங்களில் பிரத்யேக சலுகைகளுடன் பொங்கலின் பண்டிகை உணர்வைக் கொண்டாடுகிறது, இது வாடிக்கையாளர்களுக்கு யமஹாவை வீட்டிற்கு கொண்டு வர சரியான நேரமாக அமைகிறது. சிறப்பு சலுகைகளில் கவர்ச்சிகரமான கேஷ்பேக் மற்றும் குறைந்த கட்டண திட்டங்கள் ஆகியவை அடங்கும், இது மகிழ்ச்சியான அறுவடை திருவிழாவின் போது தமிழ்நாட்டில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு யமஹாவை சொந்தமாக்குவதற்கான அருமையான வாய்ப்பை வழங்குகிறது.

பொங்கல் சலுகைகள் விவரம்:

- எஃப்இசட்-எஸ் எஃப் ஐ வெர் 4.0, எஃப்இசட்-எஸ் எஃப் ஐ வெர் 3.0, எஃப்இசட் எஃப் ஐ மற்றும் எஃப்இசட்-எக்ஸ் சீரிஸ் ஆகியவற்றில் ரூ. 4,000 வரை கேஷ்பேக் மற்றும் ரூ. 4,999 குறைந்த முன்பணம் செலுத்துதல்.
- ஃபேசினோ 125 எஃப் ஐ ஹைப்ரிட் மற்றும் ரே இசட்ஆர் 125 எஃப் ஐ ஹைப்ரிட் ஸ்கூட்டர்களுக்கு ரூ. 4,000 வரை கேஷ்பேக் மற்றும் ரூ. 999 குறைந்த முன்பணம் செலுத்துதல்.

இந்த சிறப்பு பொங்கல் சலுகைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கிடைக்கின்றன, வாடிக்கையாளர்கள் யமஹாவை வீட்டிற்கு கொண்டு வரும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் பண்டிகை காலத்தை தழுவ அனுமதிக்கிறது. யமஹாவின் பல்வேறு தயாரிப்பு போர்ட்ஃபோலியோவில் ஒய்இசட்எஃப்-ஆர்3 (321சிசி), எம்டி-03 (321சிசி), ஒய்இசட்எஃப்-ஆர்15எம் (155சிசி), ஒய்இசட்எஃப்-ஆர்15 வி4 (155சிசி), ஒய்இசட்எஃப்-ஆர்15எஸ் வி3 (155சிசி), எம்டி-15 வி2 (155சிசி), மற்றும் எஃப்இசட்-எஸ் எஃப்ஐ வெர் 4.0 (149சிசி), எஃப்இசட்-எஸ் எஃப்ஐ வெர் 3.0 (149சிசி), எஃப்இசட்-எக்ஸ் (149சிசி) போன்ற பிரீமியம் மோட்டார் சைக்கிள்கள் அடங்கும். கூடுதலாக, யமஹா ஏரோக்ஸ் 155 பதிப்பு எஸ் (155 சிசி), ஏரோக்ஸ் 155 (155 சிசி), ஃபேசினோ எஸ் 125 எஃப்ஐ ஹைப்ரிட் (125 சிசி), ஃபேசினோ 125 எஃப்ஐ ஹைப்ரிட் (125 சிசி), ரேஇசட்ஆர் 125 எஃப்ஐ ஹைப்ரிட் (125 சிசி) மற்றும் ரேஇசட்ஆர் ஸ்ட்ரீட் ரேலி 125 எஃப்ஐ ஹைப்ரிட் (125 சிசி) உள்ளிட்ட ஸ்கூட்டர்களை வழங்குகிறது.